# கடப்பாடு மீள்திறன் ஒன்றிணைந்த செயல்பாடு

நாங்கள் கரியமிலவாயு வெளியாக்கத்தில் நடுநிலையைக் கட்டிக்காக்கும் தெமாசெக்கை உருவாக்கி இருக்கிறோம்.

இனி, எங்களது வளர்ந்துவரும் முதலீட்டுப் பட்டியலின் மொத்த கரியமிலவாயு வெளியாக்கத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் பாதியாகக் குறைப்பதிலும், 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜியமாக்குவதிலும் கடப்பாடு கொண்டுள்ளோம்.

இவை பல தலைமுறைகளின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் இலக்குகளாகும்.

மின்னிலக்கப் பொருளியல் துரித வளர்ச்சி அடைந்து வருகிறது. இத்துறையில் ஆழமான அறிவாற்றல் பெற்றிருப்பது மேலும் அவசியமாகியுள்ளது.

நீடித்த நிலைத்தன்மையில் எப்போதும்போல கடப்பாடு கொண்டிருப்போம்; துன்பத்திலும் மீள்திறனுடன் நீடித்திருப்போம்; அதோடு பங்காளித்துவமாக ஒன்றிணைந்து செயல்படுவோம்.

அதிக கனிவான உலகில் வாழ்வைச் சீர்தூக்கிவிடவும், மீள்திறனுடன் அனைவரையும் உள்ளடக்கும் சமூகங்களை உருவாக்கவும், மேன்மேலும் மேம்பட்டதோர் உலகை விட்டுச்செல்லவும் நாங்கள் சரியானதைச் சிறப்பாகச் செய்து, நல்லன செய்வோம்.

பெரும் பாதிப்பை உண்டாக்கிய கொவிட்-19, அறியப்படாதவற்றுக்குத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.

**கடப்பாடு, மீள்திறன், ஒன்றிணைந்த செயல்பாடு**



## தெமாசெக்கின் ஆணிவேர்கள்

"இத்தகைய நிறுவனங்களை நடத்துவது அரசாங்கத்தின் வேலையல்ல என்பது தெளிவாக இருந்ததால், சுமார் 35 நிறுவனங்களுக்கும் இதர முதலீடுகளுக்கும் பொறுப்பும் உரிமையும் ஏற்க தெமாசெக் அமைக்கப்பட்டது.

கொள்கைகளை வகுத்து, ஒழுங்குமுறையை நிலைநாட்டும் அரசாங்கத்தின் பொறுப்புக்கும், நிறுவனங்களின் பங்குதாரராகவும் வர்த்தக உரிமையாளராகவும் தெமாசெக் ஏற்றிருந்த பொறுப்புக்கும் இடையில் தெளிவான பிரிவினையை இது அளித்தது."

**டாக்டர் டோனி டான் கெங் யாம்**

சிங்கப்பூர் குடியரசின் முன்னாள் அதிபர் (2011 – 2017)
தெமாசெக்-கின் 40வது ஆண்டு நிறைவு விருந்தில்



## ஓர் அமைப்பாக மீள்திறன்


தெமாசெக்கில், நாங்கள் செய்யும் அனைத்திலும் நீடித்த நிலைத்தன்மை மையமாக இருக்கிறது

### தெமாசெக் நிறுவனம்

2020-க்குள் **கரியமிலவாயு நடுநிலையை** அடைந்தது

### தெமாசெக் முதலீட்டுப் பட்டியல்

உத்தேச நிகர கரியமிலவாயு வெளியாக்கம்




* புள்ளிவிவரங்கள் இலக்கு 1 மற்றும் 2 வெளியாக்கத்திற்கான உத்தேசக் கணிப்புகளின் அடிப்படையிலானவை.

† கரியமிலவாயு சமன் ($CO_2e$) என்பது வெவ்வேறு வகையான பசுமைக்குடில் வாயுக்களின் வெளியாக்கத்தை ஒப்பிடுவதற்கான வழக்கமான அளவீடாகும்.

**கரியமிலவாயு வெளியாக்கத்தைக் குறைத்தும்** கரியமிலவாயு வரவினங்களை வாங்கியும் — நடைமுறைச் செயல்பாடுகளில் நீடித்த நிலைத்தன்மை கட்டிக்காக்கப்படும்

எங்கள் முதலீட்டுப் பகுப்பாய்வில் **ESG சட்டமைப்பை** உள்ளடக்குவதன் மூலம் — நீடித்த நிலைத்தன்மை வேரூன்றப்படும்

முதலீட்டுப் பட்டியலில் உள்ள நிறுவனங்களின் **கரியமிலவாயுவைக் குறைக்கும்** திட்டங்களில் ஈடுபட்டு — நீடித்த நிலைத்தன்மை ஊக்குவிக்கப்படும்

**பருவநிலை மாற்றத்தை எதிர்க்கும்** முன்னோட்டத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதன்மூலம் — யோசனைகள் செயல்படுத்தப்படும்


**மின்சக்தி, உணவு, கழிவு, தண்ணீர்** ஆகியவற்றின் நீடித்த நிலைத்தன்மைக்கான தீர்வுகளில் முதலீடு செய்ய — பங்காளிகளுடன் முனைப்புகள் மேற்கொள்ளப்படும்

## ஒரு முதலீட்டாளராகக் கடப்பாடு

நாங்கள் மீள்திறன்மிக்க இருப்புநிலைக் குறிப்பை நிலைநாட்டியதால், நீண்டகாலத்திற்கு முதலீடு செய்வதிலும், எங்களது முதலீட்டுப் பட்டியலின் நிலையை மாற்றியமைப்பதிலும் எங்களுக்கு நீக்குப்போக்கு கிடைக்கிறது

### தொடங்கப்பட்டதிலிருந்து நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு

**S$306பி** நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு 31 மார்ச் 2020 அன்று





**NPV கடந்த 20 ஆண்டுகளில் கிட்டத்தட்ட மும்மடங்கானது**

- சந்தை மதிப்பு
- பங்குதாரர் பங்குமுதல்
- குறியிலிருந்து சந்தை வரையிலான அசைவு தவிர்த்த பங்குதாரர் பங்குமுதல்[4]

தெமாசெக்கின் நிதிநிலை பலாபலன் பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

### S$ மொத்த பங்குதாரர் வரவு [5] (%)

**6%** பங்குதாரருக்குரிய 20 ஆண்டுகால வரவு




### துறை [5,6] (%)



| | 2020 | 2019 |
|---|---|---|
| நிதிச் சேவைகள் | 23 | 25 |
| தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் | 21 | 20 |
| பயனீட்டாளர் மற்றும் சொத்துச் சந்தை | 17 | 17 |
| போக்குவரத்து மற்றும் தொழில்துறைகள் | 16 | 16 |
| உயிராய்வியல் மற்றும் வேளாண்மை | 8 | 7 |
| எரிசக்தி மற்றும் வளங்கள் | 2 | 3 |
| பலதுறை நிதிகள் | 8 | 8 |
| மற்றவை (கடன் உட்பட) | 5 | 4 |


1 25 ஜூன் 1974 அன்று தெமாசெக் நிர்மாணிப்பு.
2 நிதியாண்டு 75, 25 ஜூன் 1974 அன்று தொடங்கி 31 டிசம்பர் 1975 அன்று முடிவடைந்தது.
3 நிதியாண்டின் முடிவு 1993-க்கு முன்பாக இருந்த டிசம்பர் 31ம் தேதியிலிருந்து 1994 முதல் மார்ச் 31ம் தேதியாக மாற்றப்பட்டது.
4 31 மார்ச் 2006 முடிவுற்ற நிதியாண்டிலிருந்து, கணக்கியல் தரங்களின்படி 20% துணை முதலீடுகள் சந்தைக்குரியதாகக் குறிக்கப்படவேண்டும்.
5 31 மார்ச் நிலவரப்படி.
6 அடிப்படை சொத்துகளின் அடிப்படையிலான பங்கீடு.
7 31 மார்ச் முடிவடைந்த ஆண்டுக்குரியது.

### தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு

தெமாசெக்கின் கடன் தரத்தின் அளவியல் நிலையை எடுத்துரைத்து, ஒரு முதலீட்டு நிறுவனமாக எங்களுக்குள்ள அடிப்படை பலத்தை வெளிப்படுத்துகிறது. இந்த விகிதங்களின் விழுக்காடு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கடன் தரம் அதிகமாக இருக்கும்

#### ஆதாய ஆற்றல்[7]

மொத்த கடன் **5%** நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பில்




தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

## பொறுப்பாளராக ஒன்றிணைந்து செயல்படுவோம்

எங்கள் பங்காளர்களுடன் ஒன்றிணைந்து, கொவிட்-19 கிருமிப்பரவலுக்கு எதிரான போராட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டுச் சமூகங்களுக்கு தெமாசெக் அறநிறுவனம் பங்களித்திருக்கிறது

**அனைவரும் பாதுகாப்பாக இருக்கும்வரை ஒருவருக்கும் பாதுகாப்பில்லை**

**கிருமிப்பரவலை ஒடுக்க எங்கள் பங்கைச் செய்கிறோம்**

### நோயைக் கண்டறிதல்



பரிசோதனை சாதனங்களை உருவாக்கி, உற்பத்திக்கு உறுதியளிக்க பங்காளிகளுடன் இணைந்து செயல்பட்டது

### பரவல் கட்டுப்பாடும் தொடர்புகளின் தடமறிதலும்



கிருமிப்பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு முனைப்புகளை அறிமுகப்படுத்தியது

### சிகிச்சை



முதலீட்டு நிறுவனங்கள் புதுமையான தீர்வுகளை உருவாக்க உதவின

### பாதுகாப்பும் தடுப்பும்



சமூகத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கியது

### உதவி




சுமார் 35 நாடுகளுக்குப் பரிசோதனை சாதனங்களும் அத்தியாவசியப் பொருட்களும் வழங்கியது

+65 9101 0207 எண்ணுக்கு "SUBSCRIBE" என அனுப்பவும்